சார்பு நீதிமன்றம், அவிநாசி

**O.S.444 /2016**

**நாள் 14.02.2023**

வா.சா.1 – 3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். ராமசாமி கவுண்டர் என் தந்தை வழி தாத்தா என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி சண்முகசுந்தரசாமி என் தகப்பனார் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி செல்லம்மாள் என் தந்தை வழி பாட்டி. வழக்கு நிலுவையில் உள்ளபோது என் தந்தை 13.01.2017 அன்று இறந்துவிட்டார். என்னையும், என் தாயார் மற்றும் அவரது தயார் செல்லம்மாள் ஆகியோரை வாரிசுகளாக விட்டுவிட்டு என் தந்தை இறந்துவிட்டார் என்றால், சரிதான். தந்தை வழி தாத்தா ராமசாமி கவுண்டருக்கு, என் தகப்பனார் மற்றும் ராமாத்தாள், அங்காத்தாள், சுப்புலட்சுமி ஆகியோர் மக்கள் என்றால், சரிதான். ராமசாமி கவுண்டர் 08.02.1990 ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். செல்லம்மாள், 1 ம் பிரதிவாதி இறந்த பிறகு 17.06.2017 ம் தேதியில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் 3, 4 பிரதிவாதிகள், அங்காத்தாள் ஆகியோரை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றால், சரிதான். அங்காத்தாளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், சரிதான். தாவா சொத்து தவிர மற்ற சொத்துக்களை சண்முகசுந்தரசாமி அனுபவிக்கவில்லை என்றால், சரியல்ல. அவர் தன்னுடைய தகப்பனாரின் சொத்துக்களையும் விவசாயம் செய்து அனுபவித்து வந்தார். அவரது தகப்பனாரின் சொத்துக்களை இந்த வழக்கில் சொத்து விவரத்தில் சேர்க்கவில்லை என்றால், எனக்கு தெரியவில்லை.

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

K SURESH KUMAR
Digitally signed by K SURESH KUMAR
Date: 2023.02.14 16:34:51 +0530

Subordinate Judge,
Avinashi.